**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure).**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, KARUR**
**DVC No. 71/2023**

**Deposition of Witness : PW1**

| | | | |
|---|---|---|---|
| Name | நந்தினி | Taluk | |
| Husband Name | ராஜேஷ் | Village | |
| Age | | Calling | |
| **Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969 (Act 44 of 1969) on the day of 11.06.2025.** | | | |

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் B.Sc., Bio Technology படித்துள்ளேன். நான் 2020ம் ஆண்டு எனது திருமணத்திற்கு பின்னிட்டு விவேகானந்தா கல்லுரியில் படித்து முடித்தேன் என்றால் சரிதான். பிரமாணவாக்குமூலத்தை நான் படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். கடைசி செமஸ்டர் நான் எதிர்மனுதாரர் வீட்டில் இருந்து தான் படித்தேன் என்றால் சரிதான். என்னுடைய படிப்பிற்கு எதிர்மனுதாரர்கள் உதவியாக இருந்து வந்தார்கள் என்றால் சரிதான். கல்லூரி படிப்பு முடிந்தபிறகு கரூரில் tally மற்றும் அக்கவுண்ட் வகுப்பிற்கு சென்றேன் என்றால் கடந்த ஒரு வருடமாக செல்கிறேன். நான் சொல்வது பொய் என்றும், எதிர்மனுதாரர்கள் வீட்டில் இருந்து தான் சென்று வந்தேன்எ ன்று சொன்னால் சரியல்ல. எனது திருமணம் எங்கு நடந்தது என்றால் ரெங்கபாளையத்தில் உள்ள முருகன் கோவிலில் நடந்தது.

2) இவ்வழக்கில் நான் திருமண அழைப்பிதழை சமர்ப்பித்துள்ளேன் என்றால் சரிதான். அதில் என்ன முகவரி குறிப்பிட்டிருந்தது என்றால் ரெங்கபாளையம் என்று தான் குறிப்பிட்டிருந்தது. நான் தாக்கல் செய்த திருமண அழைப்பிதழில் தண்ணீர் பந்தல் என்ற முகவரி குறிப்பிட்டிருக்கிறது என்றால் சரிதான். எங்களது திருமணம் கொரனா சமயத்தில்

**Sd/-R.Mahesh**
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்(FAC), கரூர்.

நடந்தது என்றும், அதனால் திருமண அழைப்பிதழ் தயார் செய்யவில்லை என்றும், வழக்கிற்காக திருமண அழைப்பிதழை போலியாக தயாரித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வரதட்சணையாக லேப் டாப், டிவி கொடுத்ததாக சொல்லியுள்ளபோது எந்த கடையில் வாங்கினேன் என்றால் டீவி, பிரிட்ஜ் கோயம்புத்தூரில் வாங்கினோம் . கோயம்புத்தூருக்கு யாரெல்லாம் போனோம் என்றால் நானும், என்னுடைய அம்மா, எதிர்மனுதாரர்கள் சென்றோம். நான் சொல்வது பொய் என்றும், கொரனா ஊரடங்கு காரணமாக வெளியூர் செல்லமுடியாது என்று சொன்னால் சரியல்ல. என்ன லேப்டாப் என்றால் HP ஆகும். என்னுடைய படிப்பிற்காக வாங்கி கொடுத்தார்கள். அது எதிர்மனுதாரர்கள் வீட்டில் உள்ளது. நான்சொல்வது பொய் என்றும், திருமணத்தின்போது ASUS லேப்டாப்தான் கொண்டு வந்தேன் என்று சொன்னால் சரியல்ல.

3) அஞ்சனா நர்சிங் ேஹாமில்தான் எனது பிரசவ கால மருத்துவம் பார்த்து வந்தேன் என்று சொன்னால் சரிதான். எல்லா மருத்துவ செலவுகளையும் 1ம் எதிர்மனுதாரர்தான் பார்த்தார் என்று சொன்னால் சரியல்ல. என் அம்மாதான் பார்த்தார். புகாரிலும்,பிரமாண வாக்குமூலத்திலும் எதிர்மனுதாரர்கள் யாரும் வந்து குழந்தையை பார்க்கவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் இருப்பது என்னுடைய கணவரும், குழந்தையும் என்று சொன்னால் சரிதான். **மேற்படி புகைப்படம் எ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எதிர்மனுதாரர்கள் மருத்துவமனையில் என்னுடன் தான் இருந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. குழந்தையின் பிறந்ததேதி என்ன என்றால் 12.03.2021 ஆகும்.

4) குழந்தை பிறந்த பிறகு அம்மா வீட்டில் இருப்பது வழக்கம் என்றால் சரிதான். கட்டாயத்தின்பேரில்தான் எதிர்மனுதாரர்கள் வீட்டிற்கு வந்தேன் என்று புகாரிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது பிறந்ததேதி 12.06.2000 ஆகும். என்னிடம் காட்டப்படும் புகைப்படம் 2021ம் வருடம் எதிர்மனுதாரர்கள் வீட்டில் பிறந்தநாள் கொண்டாடியபோது எடுத்த புகைப்படம் என்றால் சரிதான். எந்த ஆண்டு, எந்த தேதியில் கோயம்புத்தூர் சென்றோம்எ ன்றால் குழந்தை பிறந்து 8 மாதங்கள் கழித்து சென்றோம். கோயம்புத்தூரில் எங்கு வசித்தோம் என்றால் கணபதியில்

**Sd/-R.Mahesh**

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்(FAC), கரூர்.

வசித்து வந்தோம்.

5)கோவை சரவணம்பட்டியில் உள்ள OSMIUM என்ற ஐடி நிறுவனம் தெரியுமா என்றால் தெரியாது. 1ம் எதிர்மனுதாரர் அங்குதான் வேலை வேலை பார்த்தார் என்றும், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. கோயம்புத்தூரில் எனக்கு அடிப்படை வசதி எதுவும் செய்து தரவில்லை என்று புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்வது பொய் என்றும், கோயம்புத்தூரில் நான் நல்ல வசதியுடன் தான் வாழ்ந்து வந்தேன் என்று சொன்னால் சரியல்ல. வீட்டு வாடகை என் தாயார் தான் செலுத்தி வந்தார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.வீட்டு வாடகை எவ்வளவு என்றால் ரூ. 5 ஆயிரம் ஆகும். என் தாயார் வீட்டுகுடித்தனம் நடத்தி வருகிறார் என்றால் சரிதான். வருமானம் ஈட்டு தொழில் செய்து வருகிறார் என்றால் இல்லை. என் அண்ணன் வேலை செய்கிறார்.

6) எனது குழந்தையின் காதணி விழா ஸ்ரீரங்கம் கோவிலில் நடந்தது என்றால் சரிதான். காதணி விழாவிற்கு சுமார் 10 முதல் 15 பேர் வந்தார்கள். நானும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் ஒன்றாக வசித்து வந்தோம் என்றால் சரிதான். 4ம் எதிர்மனுதாரர் விராலிமலையில் உள்ளார் என்றால் சரிதான். ரெங்கபாளையத்திற்கும், விராலிமலைக்கும் சுமார் 70 கி.மீ உள்ளது என்றால் சரிதான். 4ம் எதிர்மனுதாரரரின் கணவர் சசிகுமார் என்ன தொழில் செய்கிறார் என்றால் விராலிமலையில் ராஜலிங்கம் என்ற பெயரில் டிரான்ஸ்போர்ட் வைத்திருக்கிறார். புகாரிலும், பிரமாண வாக்குமூலத்திலும் 1ம் எதிர்மனுதாரர் எந்த வேலைக்கு செல்லாமல் வீட்டில் தான் இருந்து வருகிறார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். புகாரிலும், பிரமாண வாக்குமூலத்திலும் பத்தி 15 ல் 1ம் எதிர்மனுதாரர் ராஜலிங்கம் என்ற பெயரில் டிரான்ஸ்போர்ட் நடத்தி மாதம் ரூ. 40 ஆயிரம் சம்பாதித்து வருகிறார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கிற்காக முன்னுக்குபின் முரணாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 5ம் எதிர்மனுதாரர் தனது கணவருடன் தாந்தோணிமலையில் வசித்து வருகிறார் என்று சொன்னால் சரிதான்.

7)புகாரிலும், பிரமாண வாக்குமூலத்திலும் 1ம் எதிர்மனுதாரருக்கு 2 வது திருமணம்

**Sd/-R.Mahesh**

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்(FAC), கரூர்.

நடந்தது என்றும், அவர்கள் 4ம் எதிர்மனுதாரர் வீட்டில் வசித்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். புகாரிலும், பிரமாண வாக்குமூலத்திலும் 1ம் எதிர்மனுதாரருக்கு இன்னொரு பெண் பார்த்து வருகிறார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதுவும் உண்மையில்லை என்றும், புகார் முன்னுக்குபின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல. புகைப்படம் கொடுத்துள்ளேன். 1 முதல் 3 எதிர்மனுதாரருடன் சொந்த வீட்டில் வசித்து வந்தோம் என்றால் சரிதான். புகாரிலும், பிரமாண வாக்குமூலத்திலும் புது வீடு கட்டுவதற்காக வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்தியுள்ளார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் OPPO F7 என்ற மொபைல் வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் உடைத்துவிட்டார். நான் தாக்கல் செய்துள்ள பிரிவு 65 B ஆவணத்தில் OPPO F7 என்ற மொபைல் பயன்படுத்தியுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த மொபைலை 1ம் எதிர்மனுதாரர் பிறந்த நாள் பரிசாக கொடுத்தார் என்றும், நான் வழக்கிற்காக உடைத்து விட்டார் என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

8) நான் என்ன பரிகாரம் கேட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னை அடித்து கொடுமைபடுத்தினதாகவும், அதனால் பரிகாரம் கேட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளேன். வேறு எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரிதான். பொருட்கள் கேட்டும், குழந்தையின் செலவிற்காக கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கை எனது அண்ணனின் தூண்டுதலின்பேரில் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகாரில் எனது அண்ணன் மற்றும் அம்மாவின் தொலைபேசி எண் மட்டும் உள்ளது என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் pendrive வில் உள்ள வீடியோவை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அதில் எனது கணவரும், வேறொரு பெண்ணும் உள்ளார்கள் என்றால் சரிதான்.

9) புகாரிலும், பிரமாண வாக்குமூலத்திலும் 1ம் எதிர்மனுதாரர் பல பெண்களுடன் உள்ளார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த வீடியோவில் இருந்த பெண் பெயர் தீபிகா என்றால் பெயர் தெரியாது. மேற்படி பெண் 1ம் எதிர்மனுதாரரின் முன்னாள் காதலி என்று எனக்கு ஏற்கனவே தெரியும் என்றால் சரியல்ல. புகாரிலும், பிரமாண

**Sd/-R.Mahesh**

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்(FAC), கரூர்.

வாக்குமூலத்திலும் 1ம் எதிர்மனுதாரர் மறைத்து வைத்திருந்த பென் டிரைவிலிருந்து பார்த்தேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் அவரது லேப்டாப்பில் இருந்த வீடியோவை பார்த்து pendrive copy செய்து எடுத்து கொண்டேன். மேற்படி வீடியோ திருமணத்திற்கு முன்பு 1ம் எதிர்மனுதாரர் போனில் எடுத்து அழிக்கப்பட்ட வீடியோ என்றால் சரியல்ல. லேப்டாப்பில் இருந்த வீடியோ ஆகும். மேற்படி வீடியோவை என் கணவரின் மொபைலிருந்து ஆன்ட்ராய்டு ரெக்கவரி ஆப் மூலமாக எடுத்தேன் என்றால் சரியல்ல. வீடியோ பார்த்ததற்கு பின்னிட்டு நான் என் அண்ணன், அம்மாவிடம் சொன்னேன் என்றால் சரிதான்.

10) பின்னிட்டு நானும் , எனது அண்ணன், அம்மாவும் எதிர்மனுதாரர் வீட்டிற்கு சென்று எதிர்மனுதாரர் வீடியோவை பற்றி கேட்டேன் என்றால் சரிதான். 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் 1ம் எதிர்மனுதாரரை வீடியோ குறித்து கண்டித்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. யாரும் எதுவும் 1ம் எதிர்மனுதாரரை சொல்லவில்லை என்றால் சரிதான். பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 10ல் 4, 5 எதிர்மனுதாரர்கள் 1ம் எதிர்மனுதாரரை கண்டித்தார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சொல்லவில்லை. அதன் பின்னிட்டு நான் எனது அம்மாவீட்டிற்கு சென்றேன் என்றால் சரிதான். அதன் பின்னிட்டு எனது அண்ணன் இந்த வீடியோ வெளியே வராமல் இருக்க வேண்டும் என்றால் பணம் கொடுக்கவேண்டும் என்றும் 1ம் எதிர்மனுதாரிடம் சொல்லி பணம் பறித்த விவரம் தெரியுமா என்றால் சரியல்ல.

11) ஊர் மத்தியஸ்தர்கள் ராமமூர்த்தி மற்றும் காளிமுத்து வீட்டில் வந்து பேசினார்கள் என்றால் சரிதான். அதற்கு பிறகு நான் ரெங்க பாளையத்திற்கு வந்தேன் என்றால் சரிதான். வந்த அன்றே நான் என்னுடைய அம்மாவீட்டிற்கு சென்றேன் என்றால் 3 நாட்கள் கழித்து என் அம்மாவீட்டிற்கு சென்றேன். நான் போகும்போது லேப்டாப், நகைகள் அனைத்தையும் எடுத்து சென்றுவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் வழக்கிற்காக பொய்யாக புனையப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரர்க்ள யாரும் எந்த குடும்ப வன்முறையும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வீடியோ ஒன்றை மட்டும்

**Sd/-R.Mahesh**

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்(FAC), கரூர்.

வைத்து நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**Sd/-R.Mahesh**
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்(FAC), கரூர்.